03.03.2026.
S.C.No.11/2011

Crl.M.P.4465/2023 நாள் 11.12.2023 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் அ.சா.7 விஜயலட்சுமி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

எதிரி குறுக்கு விசாரணை

இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி உள்ளூர்க்காரர், தெரிந்தவர் என்றால் சரிதான். எதிரி சங்கிலி எங்கள் ஊரைச்சேர்ந்தவர். எதிரி சங்கலி வீட்டிற்கும் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி வீட்டிற்கும் எவ்வித முன்விரோதமும் கிடையாது என்றால் சரிதான். சண்டை நடந்த தேதி தெரியுமா என்றால் 17.05.2020 ஆகும். அன்றைய தினம் சம்பவத்திற்கு முன்னர் சண்டை போட்டது பற்றி எனக்கு தெரியாது. சம்பவ சமயத்தில் கிருஷ்ணமூர்த்தி குடும்பத்தில் இருந்து எத்தனை பேர் சங்கிலி வீட்டிற்கு சென்றார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை. நான் அன்றைய தினம் வேலைக்கு போய்விட்டு வரும்போது தான் சம்பவத்தை பார்த்தேன். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும் சொல்லித்தான் தெரியும் என்று சொன்னால் சரியல்ல. நேரடியாக பார்த்தேன். வாக்குவாதம் நடந்தது. அப்போது எதிரி வீட்டிற்குள் இருந்து வந்தார். ஊர்க்காரர்கள் அங்கு நிறைய பேர்கள் இருந்தார்கள். சண்டையை யாரும் விலக்கிவிடவில்லை என்றால் சரியல்ல. விலக்கிவிட்டார்கள். நான் கூலி வேலை செய்கிறேன். மாலை நேரத்தில்தான் வேலை முடியும் என்றால் சரியல்ல. மதியமே வேலை முடிந்துவிட்டது. பச்சை கலர் கத்தியால் குத்தினார். 1.1/2 அடி அளவில் இருக்கும். நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்றும் உள்ளூர்க்காரர் என்பதால் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.03.03 13:39:12 +0530

Principal District Judge,
Dindigul.